மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, இது பற்றி ஒன்றும் என்னிடம் பதில் இல்லை. இதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சொல்லப்படும்.

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற பணி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த ஒப்படைப்பின் பிரகாரம் அரிசனங்களுக்கு மனை கொடுப்பதிலே அவர்கள் சீனியாரிட்டி முறையைக் கடைபிடிப்பதில்லை. 1960 ஆம் வருடத்திலே மனு கொடுத்தவர்களை விட்டுவிட்டு, 1973-லே மனு கொடுத்தவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்படுகிறது. ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே முன்காலத்திலே கொடுக்கப்பட்ட அந்த மனுதாரர்களுக்கு முதலிடம் கொடுத்து, வருட வாரியாக இந்த அலாட்மெண்ட்டை ஒதுக்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா? ஏன் என்றால், இப்போதுள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், தவறான முறையிலே இந்த அதிகாரத்தைப் பயன் படுத்துவதினாலும், அவர்களுக்கு வேண்டப்பட்டவர்கள், வேண் டாதவர்கள் என்று பார்த்து வீடுகளை ஒதுக்குகிற காரணத் தாலும், இதற்கு ஒரு வரையறை வைத்து, வருட வாரியாக அந்த இடத்திலே பட்டா கொடுத்தவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப் பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற் றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என் பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

பேரவைத் தலைவர் அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

திரு. கி. மனோகரன்: * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1987 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சனை பற்றி பேசவேண்டுமானால் என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசலாம். இங்கே கேட்பது முறையல்ல. *

(பேரவைத் தலைவர்)

* * * *

* * * *

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவை அத்தனையும் அவைக் குறிப்பில் இடம் பெறாது.

(முற்பகல் 11-10)

3. வரவு-செலவுத் திட்டம் 1987-88 பொது விவாதம்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திருக்கின்ற 1987-88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் வரவு-செலவு அறிக்கைக்கு முன்பாகவே இந்தத் தமிழகத்தை உலுக்கிய, தமிழக மக்களைப் பெரும் துயரத்தில் ஆழ்த்திய அரியலூர் இரயில் விபத்தைப் பற்றி வேதனையுடன் சில கருத்துக்களை குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது சம்பந்தமாக நானும் சில கருத்துக்களை வெளிட்டு. . (குறுக்கீடு)

(முற்பகல் 11-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** இவை அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) * (ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

* * * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.